<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மகாலிங்கம் | நாள் | 29.04.2024 |
| தகப்பனார் பெயர் | கண்ணுபையன் | | |

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

12) தாவா சொத்தில் உள்ள கிணற்றிற்கு எந்த வருடத்தில் மின் இணைப்பு பெறப்பட்டது என என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை. எத்தனை வருடங்களாக மேற்படி மின் இணைப்பு நிலையில் உள்ளது என்ற விவரத்தை என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், குறிப்பாக சொல்லவில்லை. என் தந்தை தாவா சொத்தில் கிணறு வெட்டியதாகவும், அதற்கு 1ம் பிரதிவாதி அவரது பெயரில் மின் இணைப்பு பெற்று விட்டதாகவும் தான் என் வழக்குரையில் நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

13) இவ்வழக்கில் 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் விண்ணப்பம் முறையாக பரிசீலிக்கப்பட்டுத்தான் அவரது பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக பதிலுரை தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரிதான். ஆனால், அது தவறாக சொல்லப்பட்டுள்ளது. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால், கட்டிடத்திற்கு கம்பிகட்டும் தொழில் செய்கிறேன். தனியாக மேற்படி தொழிலை செய்கிறேனா என்றால், ஒப்பந்த அடிப்படையில் செய்கிறேன்.

14) என் வழக்குரையில் பொன்னம்மாள் என நான் குறிப்பிட்டுள்ள நபர் யார் என்றால், அவர்தான் ச.எண்.534/3 ல் உள்ள 2.18 ஏக்கரில் 2/6 பங்கு நிலத்தை முதலில் கிரயம் பெற்றவர் ஆவார். கிணற்றிற்கும், பிரதிவாதியின் நிலத்திற்கும் இடையில் என்ன உள்ளது என்றால், ச.எண்.534/3C ல் கிழக்கு ஓரமாக கிணறு உள்ளது. மேற்படி கிணற்றிற்கு வடக்கு பகுதியில் ச.எண். ச.எண்.534/3B ல் 1ம் பிரதிவாதியின் நிலம் உள்ளது. மேற்படி கிணற்றிற்கும் பிரதிவாதியின் நிலத்திற்கும் இடையே வரப்பும், தென்னை மரங்களும் ச.எண்.534/3C ல் உள்ளது.

15) இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால், படித்து பார்த்துள்ளேன். கடந்த 23.07.1970ம் வருட கிரய பத்திரத்தில் ச.எண்.534/3 ல் உள்ள கிணறும் சேர்த்து கிரயம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். சக்குபந்தி அடிப்படையில் மேற்படி கிணறு ச.எண்.534/2 ல்

உள்ளது. மேற்படி கிணற்றிற்கும் தற்போது இந்த தாவா சொத்திற்கும் தொடர்பில்லை என்றால், சரியல்ல.

16) மேற்படி கிணறு குறித்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொல்லியுள்ளனர் என்றால், சரியல்ல. ச.எண்.534/3C ல் நாங்கள் பயன்படுத்திவரும் கிணறு குறித்துதான் சொல்லியுள்ளனர். ச.எண்.534/3C ல் உள்ள கிணற்றை ஒருபோதும் நாங்கள் பயன்படுத்தியதில்லை என்றாலும், மேற்படி கிணற்றை 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும் போது மேற்படி ச.எண்.534/3C ல் உள்ள கிணற்றை நாங்கள் அனுபவித்து வருவதாக அவரிடம் வாய்மொழியாகத்தான் கூறியுள்ளோம் என்றாலும், ஆனால் நாங்கள் அதை அனுபவிக்கவில்லை என்றாலும், சரியல்ல.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.